DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -38

| | | |
|---|---|---|
| Name | : திரு. ராஜேந்திரன் | Caste: |
| Father's Name: | திரு. சீனிவாசன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 5th day of February -2024.

**A1, A2, A6, A7, A9, A13 to A17 present. A5, A8, A11, A18 called absent. Petition u.sec.317Cr.P.C filed and allowed. A3 produced**

**05.02.2024**

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இவ்வழக்கு சம்பவத்தின் போது நான் ஆண்டிமடம் காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தேன். 16.05.2008 அன்று நான் எனது காவல்நிலையத்தில் இருந்தபோது வான்செய்தி மூலமாக மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளர் அக்காவல் எல்லைக்குள் கொலை நடந்துவிட்டதாகவும், அந்த கொலை வழக்கு சம்மந்தமாக விசாரணைக்கு உதவி செய்வதற்காக நான் வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

சாட்சி சாட்சியம் அளிப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார். அவர் ஸ்ட்ரோக்கின் காரணமாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக அரசு தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. சாட்சி நிற்பதற்கும், ஆணவங்களை கையில் பிடிப்பதற்கும் மிகவும் சிரமப்பட்ட காரணத்தினால் அவர் ஆசனத்தில் அமரவைக்கப்பட்டு விசாரணை

மேற்கொள்ளப்பட்டது. சாட்சி அவருக்கு மூளையில் ரத்தகுழாய் வெடித்து அதற்காக சிகிச்சை பெற்று வருவதாகவும் அதன் காரணமாக தனக்கு நரம்பு தளர்ச்சி, திடீர் ஞாபகமறதி, சரியான பார்வையின்மை, கை நடுக்கம், எதையும் சரியாக புரிந்துகொள்ளும் திறன்யின்மை ஆகிய பாதிப்புகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

சாட்சி தன்னால் விஷயங்களை புரிந்துகொண்டு சாட்சியம் அளிப்பது சிரமமாக இருக்கிறது என்று சொல்லுகிறார். சாட்சி இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை பார்த்துவிட்டு அவற்றை படித்து புரிந்துகொள்வதே தனக்கு சிரமமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்.

எனது கையொப்பங்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் மகாலிங்கம் த/பெ.காசிநாதன் என்பவரது பிரேதவிசாரணை அறிக்கையில் உள்ள மொத்தம் 3 கையொப்பங்கள் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பிரேதவிசாரணை வேண்டி கொடுக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 86 ஆகிவற்றிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான்.

என்னிடம் காட்டப்படும் காசிநாதன் என்பவரது பிரேதவிசாரணை அறிக்கையிலுள்ள இரண்டு கையொப்பங்கள் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பிரேதவிசாரணை வேண்டி கொடுக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 86 ஆகிவற்றிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான்.

நீதிமன்ற கேள்வி– மேற்கண்ட ஆவணங்களை பார்த்து என்னால் இவ்வழக்கு சம்மந்தமாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் என்ன என்று உங்களால் சாட்சியம் அளிக்க முடியுமா?

பதில் – முடியாது.

கேள்வி – தற்போது உங்களுக்கு என்ன வயதாகிறது ?

பதில் – 69

கேள்வி – தற்போது எங்கு வசிக்கிறீர்கள்?

பதில் – கடலூர் மாவட்டம், வடலூருக்கு அருகேயுள்ள எல்லைக்குடி என்ற ஊரில் வசிக்கிறேன்.

கேள்வி –எந்த ஊரில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்கிறீர்கள்?

பதில் – சென்னையில் சிகிச்சை எடுக்கிறேன். மருத்துவமனையின் பெயர் எனது மகனை கேட்டால் தான் தெரியும். சாட்சி யோசித்துபார்த்துவிட்டு அந்த பதிலை சொல்லுகிறார். (அவரது மகன் மன்னர்மன்னன் ஆஜர். துணைக்கு வந்திருக்கிறார். சென்னை ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சை எடுப்பதாக அவரது மகனால் தெரிவிக்கப்பட்டது )

எனவே சாட்சியின் உடல்நிலையை கருத்தில் கொண்டு இத்துடன் முதல்விசாரணையை நிறைவு செய்யும் படி அறிவார்ந்த அரசுதரப்பு வழக்கறிஞரால் கேட்டுகொண்டதன் பேரில் முதல்விசாரணை நிறைவு செய்யப்பட்டது.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் மீன்சுருட்டி காவல்நிலையத்திற்கு சென்ற போது காலை சுமார் 10.00 இருக்குமா என்றால் இருக்கலாம். ஆண்டிமடம் காவல்நிலையத்திலிருந்து மீன்சுருட்டி காவல்நிலையம் 10 முதல் 15 கி.மீ தொலைவில் உள்ளது. நான் கையொப்பம் செய்துள்ள மேற்கண்ட ஆவணங்கள் மீன்சுருட்டி காவல்நிலையத்தில் வைத்து என்னால் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மீன்சுருட்டி காவல் ஆய்வாளர் கேட்டுகொண்டதன்பேரில் அந்த ஆவணங்களை பொய்யாக தயார்செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**3, 6 மற்றும் 8–ஆம் எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.